RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 162 | ஜூன்.19 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# இருமொழிக் கொள்கை தொடரும், புதிய கல்விக் கொள்கை ஏற்கப்படாது!..

## தமிழக ஆளுநர் உரை முக்கிய அம்சங்கள்

சென்னை: ஜூன்.19-

"இருமொழிக் கொள்கை தொடரும், புதிய கல்விக் கொள்கை ஏற்கப்படாது. ஒன்றிய அரசிடம் இருந்து தமிழகத்துக்கான நிதிப்பகிர்வினை பெற சட்டவல்லுநர் குழு அமைக்கப்படும். தமிழகத்துக்கான ஒன்றிய அரசின் பாரபட்சமான அணுகுமுறை அறிக்கையாக வெளியிடப்படும்." என சட்டப்பேரவையில் நேற்று ஆளுநர் அர்லேகர் வாசித்த உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் 17ஆவது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தலைமையில் நேற்று காலை 10 மணிக்குத் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியது, இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் உரையை வாசித்தார்.

முன்னதாக முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பதவியேற்பு விழாக்களின் போது, ஆளுநர் மாளிகையில் முதலில் வந்தே மாதரமும், இரண்டாவதாக தேசிய கீதமும், மூன்றாவதாக தமிழ்த் தாய் வாழ்த்தும் பாடப்பட்டது சர்ச்சையை உருவாக்கியது. இந்தச் சூழலில், இன்றைய சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் அர்லேகர் தனது உரையில் அண்ணா, பெரியார், காமராஜர், அம்பேத்கர் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசினார். அவர் தனது உரையை 39 நிமிடங்களில் நிறைவு செய்தார். அரசு உரையை எந்த மாற்றமுமின்றி ஆளுநர் வாசித்ததாகவே தெரிகிறது.

ஆளுநர் உரையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் வருமாறு: பெரியார், அண்ணா, காமராஜர், அம்பேத்கர், வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள் ஆகியோரை கொள்கை தலைவர்களாக கொண்டு, சாதி, மத, பண அரசியலை தாண்டி தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முதல்வர் விஜய்யால் மட்டுமே முடியும் என மக்கள் முடிவு செய்து தேர்தெடுத்துள்ளனர்.



தமிழக அரசு வரலாற்றில் இல்லாத வகையில் 'ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு' என்று கூட்டணி ஆட்சி மூலம் புதிய சாதனை செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு தமிழகத்துக்கு தேவையான உதவிகளை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றிய அரசுக்கு தமிழக மக்கள் செலுத்தும் வரியிலிருந்து, தமிழகத்துக்கு உரிய நிதிப்பகிர்வினைப்பெற சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

தமிழகத்தில் மாநில நலன் குறித்து ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும். ஒன்றிய அரசிடம் இருந்து தமிழகத்துக்கான நிதிப்பகிர்வினை பெற சட்டவல்லுநர் குழு அமைக்கப்படும். தமிழகத்துக்கு வரவேண்டிய ஒவ்வொரு ரூபாய் வருவாயும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, தமிழகத்துக்கான ஒன்றிய அரசின் பாரபட்சமான அணுகுமுறை அறிக்கையாக வெளியிடப்படும். தமிழகத்துக்கான நியாயமான நிதிப்பகிர்வை ஒன்றிய அரசிடம் இருந்து பெறுவது உறுதிசெய்யப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் நிதி நிலைமை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. தமிழகத்தில் கடன் அளவு ரூ.10 லட்சம் கோடியை எட்டியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் கடன் இரு மடங்காக உயர்ந்துள்ளது. நிதிப்பற்றாக்குறை இருந்தாலும், இந்த அரசு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

போதைப்பொருளை முழுமையாக ஒழிக்க இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து வருகிறது.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே இந்த அரசின் நோக்கம் ஆகும். தவறு செய்யும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வழிபாட்டு தலங்கள், பள்ளிகளுக்கு அருகில் இருந்த 717 மதுக்கடைகளை இந்த அரசு மூடியுள்ளது.

கனிமவளத்துறையில் நடக்கும் ஊழல் மூலம், அந்த துறையின் வருவாய் குறைந்துள்ளது. இயற்கை வளக் கொள்ளையை தடுத்து அரசின் வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறு, குறு விவசாயிகள் பெற்ற ரூ.75 ஆயிரம் வரையிலான கடன் முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட்டது. நீர்நிலைகளில் இருந்து வண்டல் மண் எடுக்க விவசாயிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேகேதாட்டு விவகாரத்தில் தமிழகத்தின் சட்ட நடவடிக்கைகள் தொடரும். உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும், தமிழகத்துக்கு உபரி நீரை மட்டுமே கர்நாடக அரசு கொடுத்து வருகிறது.

லஞ்ச, ஊழல் இல்லாத நேர்மையான நிர்வாகத்தை கொண்டு வருவதே இந்த அரசின் நோக்கம்.

தமிழகத்தில் இரு மொழிக் கொள்கையே தொடரும். கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வலியுறுத்தப்படும். புதிய கல்விக் கொள்கையை தமிழக அரசு எதிர்க்கும்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியை வழக்காடு மொழியாக மாற்ற அனுமதிக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைக்க வலியுறுத்தப்படும்.

முல்லை பெரியாறு அணைக்கு மாற்றாக கேரள அரசு அணை கட்டும் முயற்சியை தமிழக அரசு தடுத்து நிறுத்தும். கல்வித்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய அரசு சாதிவாரி கணகெடுப்பை விரைந்து முடிக்க வேண்டும். மத்திய அரசின் கணக்கெடுப்பு முடிந்தவுடன், தமிழக அரசு சமூக நீதி சர்வே நடத்தும்.

மீனவர் பிரச்சினையை தீர்க்க ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 69% இடஒதுக்கீடு பாதுகாக்கப்படும். ஒற்றை சாளர முறையில் தொழில் தொடங்க அனுமதி வழங்கப்படும். 2031ல் இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக தமிழகம் மாறும்.

இந்து சமய அறநிலையத்துறையில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்படும். இவ்வாறு ஆளுநர் உரையில் தவெக அரசின் நிலைப்பாடுகள் பலவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கர்நாடக மாநில அரசு மேகேதாட்டு அணை கட்டினால் அமைச்சர் பதவியை துறப்பேன்: அமைச்சர் எஸ்.ராஜேஷ்குமார் உறுதி

திருவள்ளூர், ஜூன்.19-

கர்நாடக மாநில அரசு, மேகேதாட்டு அணையை கட்டினால், தனது அமைச்சர் பதவியை துறக்க தயாராக இருப்பதாக சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.ராஜேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழக சுற்றுலாத் துறை அமைச்சராக இருப்பவர், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எஸ். ராஜேஷ்குமார். இவர் முதன் முதலாக நேற்று திருவள்ளூரில் உள்ள திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்துக்கு வருகை தந்தார். அப்போது, அவரை காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் வரவேற்றனர்.

தொடர்ந்து, அங்குள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகள், காங்கிரஸ் தலைவர்களின் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பிறகு, அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழகத்தில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் சுற்றுலாத் துறை மூலம் பல்வேறு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி ஏரி, கூடியம் குகை, பழவேற்காடு பறவைகள் சரணாலயம் ஆகியவற்றை பார்வையிட்டு என்னென்ன பணிகள் மேற்கொள்ளலாம் என்பது குறித்து ஆய்வு செய்ய உள்ளேன்.

அதற்கு முன்னதாக, நாளை (இன்று) சட்டப்பேரவை கூட்டத் தொடர் ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது. அதைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கை தாக்கலுக்கு பின் சுற்றுலாத்துறையில் பல்வேறு திட்டங்கள் தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட உள்ளன.

கர்நாடக மாநில அரசு, மேகேதாட்டு அணையை எக்காரணம் கொண்டும் தமிழக அரசின் அனுமதியின்றி கட்ட முடியாது. தமிழக அரசின் அனுமதியில்லாமல், கர்நாடக அரசு அணையை கட்டினால் எனது அமைச்சர் பதவியை துறக்கத் தயாராக உள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் சசிகுமார், முன்னாள் மாவட்ட தலைவர் சிதம்பரம், இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் திவாகர் பங்கேற்றனர்.

## "இரண்டு முறை தேசிய கீதம் பாடப்பட்டதில் தவறொன்றும் இல்லை" பிரேமலதா கருத்து

சென்னை: ஜூன்.19-

"சட்டப்பேரவையின் மரபு மாற்றப்பட்டு அவையில் இரு முறை தேசிய கீதம் பாடப்பட்டது. அதை நாம் வரவேற்போம்; இதில் தவறு ஒன்றும் கிடையாது." என தேதிமுக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கருத்து தெரிவித்துள்ளார்.



தமிழகத்தின் 17ஆவது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தலைமையில் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியது, இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் உரையை வாசித்தார்.

சட்டப்பேரவையின் மரபு மாற்றப்பட்டு அவையில் இரு முறை தேசிய கீதம் பாடப்பட்டது. அவையின் தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து, முடிவில் தேசிய கீதம் பாடுவதே மரபு. இதை மாற்றி, இன்று தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தேசிய கீதமும் பாடப்பட்டது. பின்னர், ஆளுநர் உரைக்கு பின்னரும் 2வது முறையாக தேசிய கீதம் பாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தேசிய கீதம் இரண்டு முறை பாடப்பட்டுள்ளது. அதை நாம் வரவேற்போம்; இதில் தவறு ஒன்றும் கிடையாது. அதற்கு முன்னர் தமிழ்த் தாய் வாழ்த்து பாடியிருக்கிறார்கள்; அதையும் நாம் வரவேற்போம். ஆளுநர் உரை ஆளும் கட்சி தரப்புக்கு ஆதரவான உரையாக இருந்தது" என்று அவர் தெரிவித்தார்.

## ஆளுநர், பாஜக, திமுக ஒன்றாக இருப்பதாக அமைச்சர் நிர்மல் குமார் குற்றச்சாட்டு

சென்னை: ஜூன்.19-

"பாஜகவுக்கும், திமுகவுக்கும் தான் மிக நெருக்கமான உறவு உள்ளது. அமலாக்கத் துறை சார்பில் செந்தில் பாலாஜி உள்ளிட்ட சிலர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டிருந்தார்கள், அந்த கோப்புகள் கடந்த வாரம் கையெழுத்தானது. ஆனால், ஆளுநர் அதற்கு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. அப்படியானால் யார் யாருடன் இணக்கமாக இருக்கிறார்கள்? ஆளுநரும், பாஜகவும், திமுகவும் ஒன்றாக இருக்கிறார்கள்" என அமைச்சர் நிர்மல் குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.



ஆளுநர் உரைக்கு பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் நிர்மல் குமார், "பாஜகவுக்கும், திமுகவுக்கும் தான் மிக நெருக்கமான உறவு உள்ளது. அமலாக்கத் துறை சார்பில் செந்தில் பாலாஜி உள்ளிட்ட சிலர் மீது நடவடிக்கை எடுக்கக் கேட்டிருந்தார்கள், அந்த கோப்புகள் கடந்த வாரம் கையெழுத்தானது. ஆனால், ஆளுநர் அதற்கு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. அப்படியானால் யார் யாருக்கு இணக்கமாக இருக்கிறார்கள். ஆளுநரும், பாஜகவும், திமுகவும் ஒன்றாக இருக்கிறார்கள்.

பாஜகவின் மறைமுக முகமாக திமுக இருக்கிறது. திமுகவை பின்னாலிருந்து இயக்குவதே பாஜகதான். செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் மீதான கோப்புகள் மீது ஆளுநர் கையெழுத்து போடாதது ஏன்?. இதற்கு பாஜகவும், திமுகவும் பதில் சொல்ல வேண்டும்.

சட்டப்பேரவையில் முதல்வர் பேச வேண்டும் என திமுக உறுப்பினர்கள் பேட்ஜ் அணிந்து வந்துள்ளனர். துணை முதல்வராக இருந்த உதயநிதிக்கு சட்டப்பேரவை நடைமுறைகள் குறித்து கூட தெரியவில்லை. இன்று ஆளுநர் உரை, எனவே ஆளுநர் மட்டும் தான் பேசுவார். பதிலுரையின் போதுதான் முதல்வர் பேசுவார்.

தமிழகத்தில் ஏற்படும் மின் வெட்டுகள் உடனடியாக சரிசெய்யப்பட்டுள்ளது. எந்தெந்த இடங்களில் மின்வெட்டு இருந்தது, அதனை எவ்வளவு நேரத்தில் சரிசெய்தோம் என்ற விவரங்களை அடுத்தநாள் தினமும் வெளியிடுகிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் குற்றச் சம்பவங்கள் நடக்கும்போது, அனைத்தும் மறைக்கப்பட்டதையே பார்த்தோம். அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில், ஒரு வாரம் கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. முகப்பேர் சிறுமி விவகாரத்தில் உயர் நீதிமன்றம் தலையிட்டு சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டது.

கடந்த ஆட்சியில் குற்றச் சம்பவங்களை மறைக்கும் வேலையை செய்தார்கள். எங்கும் ஒழுங்காக வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. இப்போது யார் குற்றம் செய்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் கண்டிப்பாக சொல்லியுள்ளார். தவறுகள் நடந்த எல்லா இடங்களிலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றச்சம்பவங்களை தடுக்க அதிகாரிகளை மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த அரசைப் போல இந்த அரசு எதையும் மூடி மறைக்கவில்லை.

பெண்கள் பாதுகாப்புக்காக கொண்டுவரப்பட்ட சிங்கப்பெண் திட்டத்தை விரிவாக்குவதே முதல்வரின் நோக்கம். சமூக ரீதியாக நடக்கும் குற்றங்களை தடுக்கவும், குறைக்கவும் அரசு முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கும். தனிப்பட்ட முறையில் நடக்கும் குற்றங்கள் மீது பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கப்பெண் படைக்கு தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது, கூடுதல் அதிகாரமும் வழங்கப்படும்.

தமிழக அரசின் நிதி நிலை எப்படி உள்ளது என்பதை அறிந்துகொள்ளவே வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. மின் துறை, போக்குவரத்துத் துறை உள்ளிட்டவை எவ்வளவு கடனில் உள்ளது என பார்த்தோம். இதனை மீட்டெடுக்கும் வேலையை செய்ய வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்பு லாபத்தில் இயங்கிய மின் துறை, போக்குவரத்துத் துறை இப்போது நலிவடைந்துள்ளது. ஆனால் கூடுதல் வருவாயை பெருக்க கடந்த அரசு எதையும் செய்யவில்லை. ரூ.30 ஆயிரம் கோடியை ஒரு குடும்பம் மட்டுமே திருடிவிட்டது என முன்னாள் நிதியமைச்சர் ஒருவரின் ஆடியோ வெளியானது.

லஞ்ச, லாவண்யத்தை குறைத்தாலே நம்மால் போதுமான அளவு நிதியை சேமிக்க முடியும். நிதி ஆதாரத்தை பெருக்க முதல்வர் பாடுபட்டு வருகிறார். இப்போது இருக்கும் பிரச்சினை என்னவென்று மக்களுக்கு சொல்லிவிட்டோம். மின்சாரத் துறை சார்பாக அடுத்த வாரத்தில் முழுமையாக ஆய்வு செய்து வெள்ளை அறிக்கை வெளியிடுவோம்.


கூடுதல் வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள ஒரு அரசு பல்கலைக்கழகமாவது லாபத்தில் இயங்குகிறதா?. திமுக முன்னாள் அமைச்சர்கள் பல்கலைக்கழகங்கள் வைத்துள்ளனர். அவை அனைத்தும் 5 நட்சத்திர ஹோட்டல் அளவு வளர்ந்துள்ளன. ஆனால், அரசின் பல்கலைக்கழகங்கள் என்ன நிலையில் உள்ளது?. இதுதான் அவர்களின் சாதனை.

அரசுத்துறை நிறுவனங்கள் வளரவேண்டும். வருவாயைப் பெருக்க புதிய நிறுவனங்கள் தொடங்க வேண்டும். ஒவ்வொரு துறையும் எப்படி செயல்பட வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டுள்ளார். பரந்தூர் விமான நிலைய விவகாரம் குறித்து ஆய்வு செய்து முதல்வர் முடிவை அறிவிப்பார்.

கடந்த ஆட்சியில் நடந்த மிகப்பெரிய தவறு எஃப்எல்2 பார் எனப்படும் மனமகிழ் மன்றங்கள். டாஸ்மாக் எண்ணிக்கையில் 20 முதல் 30 சதவீதம் வரை எஃப்எல்2 பார்களை திறந்தார்கள். விதிமுறைகளுக்கு மாறாக கடந்த ஐந்து ஆண்டுகளில் 3 முதல் 4 மடங்கு எஃப்எல்2 பார்கள் திறக்கப்பட்டன. இதில் விதிமீறல்கள் நடந்ததா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படுகிறது" என்று தெரிவித்தார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



■ திருவள்ளூர் மாவட்ட காவல் கண் காணிப்பாளராக பொறுப்பேற்றுள்ள சாய்பிரிணித் மிறிஷியை திருவள்ளூர் மாவட்ட பிரஸ்கிளப் சங்க தலைவர் பிரபு முனுசாமி தலைமையில் செயலாளர் வி.லோகநாதன் பொருளாளர் ஞி.வசந்த்குமார் துணைதலைவர் ஷி.சுரேஷ் ஒருங்கிணைப்பார் ஸி.குமரேசன் துணைதலைவர்கூஷி.மகேஷ் துணைசெயலாளர் சி.மாறன் நிர்வாக குழு கூஷி.பாலாஜி ஞி.ராஜ்குமார் ணி.கோதண்டன் சி.ரி.மோகன் முன்னிலையில் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்



# ஊத்துக்கோட்டையில் முன்னால் அதிமுக அவைதலைவர் மறைந்த வி.குணா இல்ல திருமண வரவேற்ப்பு நிகழ்வில் தவெக நிர்வாகிகள் வாழ்த்து

திருவள்ளூர், ஜூன்.19-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூர் முன்னால் அதிமுக அவை தலைவர் மறைந்த வி.குணாவின் தம்பி மகனும் மாலைதந்தி தாலுக்கா செய்தியாளர் பன்னீர்செல்வம் அண்ணன் மகனுமான வி.ராஜ்குமார் நர்மதா திருமண வரவேற்பு நிகழ்ச்சி SAR தணியார் திருமண மண்டபத்தில் 17.06.2026. மாலை 6:00 மணியளவில் நடைபெற்றது இந்த வரவேற்பு நிகழ்வில் த.வெ.க கட்சியின் ஊத்துக்கோட்டை பேரூர் செயலாளர் பிரசாந்த், துணைச்செயலாளர் ஆ.ராஜேஷ், இணைச்செயலாளர் தமிழரசன், பொருளாளர்பாலாஜி மற்றும் வழக்கறிஞர் அணி செயலாளர் கி.ராமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்



■ ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஸ்ரீ ஜோதிலிங்கேஸ்வரர் சிவனடியார் சேவா பப்ளிக் சேரிட்டபுள் டிரஸ்ட்டின் நிர்வாகியும், ஓட்டுனருமான பழனி_ சுமதி தம்பதியரின் மகன் ஜீவரத்தினத்திற்கும், சிவா டிம்பர்ஸ் உரிமையாளர் சிவக்குமார்_ கலா தம்பதியரின் மகள் சுமதிக்கும் ஆற்காடு குட்டக்கரை தெருவில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பெரியபாளையத்தம்மன் ஆலயத்தில் நடைபெற்ற திருமணத்தில் வணிகர் சங்க பேரமைப்பின் ராணிப்பேட்டை மாவட்ட தலைவரும், ஸ்ரீ அண்ணாமலையார் அறக்கட்டளை தலைவருமான பொன்.கு. சரவணன், ஸ்ரீ அகத்தியர் சேவா டிரஸ்ட் தலைவரும், கணேஷ் நாட்டு மருந்து கடை உரிமையாளருமான கணேஷ், ஸ்ரீ ஜோதிலிங்கேஸ்வரர் சிவனடியார் சேவா பப்ளிக் சேரிட்டபுள் டிரஸ்டின் தலைவரும், ஜெய் மாருதி அண்ட் கோ உரிமையாளருமான ஜெய்மாருதி சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய போது எடுத்த படம்.

# கிருஷ்ணகிரி நகராட்சி பகுதியில் நாய்களுக்கு ஏ.ஆர்.வி., தடுப்பூசி போடும் பணி தீவரம்

கிருஷ்ணகிரி, ஜூன்.19-

கிருஷ்ணகிரி நகராட்சி பகுதியில் தெருநாய்களுக்கு ஏ.ஆர்.வி., தடுப்பூசி போடும் பணி தீவிரப்படுத்தப் படுத்தப்பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி நகராட்சியில் நேற்று பழைய வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, டான்சி வளாகம், சாந்திநகர் உள்ளிட்ட பகுதிகளில் தெருநாய்கள் மற்றும் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு ஏ.ஆர்.வி., (ஆன்டி ரேபிஸ் வைரஸ்) எனப்படும் வெறிநாய்கடி வராமல் தடுப்பதற்கான தடுப்பூசியினை நாய்க்கு போடும் பணியில் நகராட்சி அலுவலர்கள், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுடன் இணைந்து ஈடுபட்டனர். சுகாதார ஆய்வாளர் மாதேஸ், நகராட்சி ஊழியர்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

இது குறித்து நகராட்சி ஆணையாளர் சேகர் கூறுகையில், கிருஷ்ணகிரி நகராட்சி பகுதியில், 1,086 நாய்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் முதல்கட்டமாக, 526 நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் முடிந்தது. இரண்டாம் கட்டமாக தற்போது மீதமுள்ள 560 நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணி துவங்கியுள்ளது. நேற்று, 42 நாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அடுத்த ஒரு வாரத்திற்குள் மற்ற நாய்கள் அனைத்திற்கும் தடுப்பூசி போடும் பணிகள் முடிக்கப்படும். தெருநாய்கடி தொல்லை அதிகமுள்ள பகுதிகள் குறித்து தகவல் அளித்தால் அப்பகுதிகளில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# உதகை வட்டம் தும்மனட்டி கிராம சமுதாய கூடத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் 43 பயனாளிகளுக்குரூ. 91.78 இலட்சம் மதிப்பீட்டில்பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

உதகை, ஜூன்.19-

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், தும்மனட்டி கிராம சமுதாய கூடத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் பவ்யா தண்ணீரு 43 பயனாளிகளுக்கு ரூ.91.78 இலட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, ஒவ்வொரு மாதமும் மக்கள் தொடர்பு முகாம் மூலமாக அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் நேரடியாக கிராமப் பகுதிகளுக்கு சென்று அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் பொதுமக்களுக்கு தெரிவிப்பதோடு, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதுதான் மக்கள் தொடர்பு முகாமின் முக்கிய நோக்கமாகும். அதன்படி இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், தமிழ்நாடு ஊரகம் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், 2 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.40 இலட்சம் மதிப்பில் தொழில் தொடங்க வங்கிகடன் இணைப்பு பெறுவதற்கான ஆணைகளையும், மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ,20 இலட்சம் மதிப்பில் கடனுதவியும், மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் 2 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.20 இலட்சம் கடனுதவியும், தோட்டக்கலை துறையின் சார்பில், வேளாண் இயந்திரமாக்கும் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.32 ஆயிரம் மதிப்பில் தேயிலை அறுவடை இயந்திரங்களையும், மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பிலும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.96 ஆயிரம் மதிப்பிலும், மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறையின் சார்பில், 1 பயனாளிகளுக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டையும், மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.5 ஆயிரம் மதிப்பில் மருந்து பெட்டகமும், 5 பயனாளிகளுக்கு ரூ.10 ஆயிரம் மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகமும், வருவாய் துறையின் சார்பில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையும், 10 பயனாளிகளுக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளையும் என 43 பயனாளிகளுக்கு ரூ. 91.78 இலட்சம் மதிப்பில் பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மகளிர் திட்ட அலுவலர் மரு.ஜெயராமன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராமசாமி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் தினேஷ், மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு (பொ) தீபா, உதகை வட்டாட்சியர் சதிஷ்வர நாயக், உதகை வட்டார வளர்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், சந்திர சேகர், உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ஜெயராணி, உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# ஏ.கே. மோட்டூர் ஊராட்சியில் தாட்கோ விழிப்புணர்வு முகாம்

திருப்பத்தூர், ஜூன்.19-

திருப்பத்தூர் மாவட்டம், ஏ.கே. மோட்டூர் ஊராட்சியில் 17/06/2026 அன்று தாட்கோ (TAH-DCO) மாவட்ட மேலாளர் கூத்தன் மற்றும் துணை மேலாளர் தினகரன் ஆகியோர் தலைமையில் இருளர், நரிக்குறவர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான அரசுத் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வி உதவித்தொகை, சுயதொழில் கடன் திட்டங்கள், தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள், வீட்டுவசதி திட்டங்கள் மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், தாட்கோ மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையுமாறு அதிகாரிகள் வலியுறுத்தினர். நிகழ்ச்சிக்கு ஏ.கே. மோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் பு.வேலு தலைமை தாங்கினார். இதில் ஊராட்சி செயலர் வசந்தி, மக்கள் சுகாதார வளர்ச்சி பணிகள் அறக்கட்டளை இயக்குநர் முனியப்பன், பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு பயனுள்ள தகவல்களை பெற்றனர். இறுதியாக, தாட்கோ திட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இம்முகாம் அனைவராலும் பாராட்டப்பட்டது.





# குன்னூரில் நீலகிரி மாவட்ட வட்டார போக்குவரத்து துறையினர் மினி பேருந்துகள் மற்றும் அரசு பேருந்துகள் ஆய்வு மேற்கொண்டனர்

குன்னூர், ஜூன்.19-

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நீலகிரி மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலர் தலைமையில், வட்டார போக்குவரத்து துறையினர், மினி பேருந்துகள் மற்றும் அரசு பேருந்துகளை ஆய்வு மேற்கொண்டனர்.இந்த ஆய்வில்போக்குவரத்து விதிகளை IP அதிக ஒலி எழுப்பும் ஹார்ன்களை வைக்கப்பட்ட. மினி பேருந்துகள்,அரசு பேருந்துகளில் ஹார்ன்களை பறிமுதல் செய்தனர்மேலும் ஓட்டுநர் உரிமம்,மற்றும் நடந்துநர் உரிமம் இல்லாமை,அதிக ஒலி எழுப்பும் ஹார்ன்களை பயன்படுத்தியதியது போன்றவற்றிக்கு 11 மினி பேருந்துகள் மற்றும் 3 அரசு பேருந்துகள் ரூ.27,500/ அபராத தொகையினை வட்டார போக்குவரத்து துறையினர் விதித்தனர்.

# தாம்பரம் மாநகரப் போக்குவரத்து காவல் துறை எல்லைக்குள் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக, தமிழக அரசு 2 கோடியே 86 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகப் போக்குவரத்து துணை ஆணையர் பிரபாகர் தெரிவித்துள்ளார்

தாம்பரம், ஜூன்.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில், தேசிய மனிதநேய உலகளாவிய அமைதி கூட்டமைப்பு மற்றும் போலீஸ் பப்ளிக் ரிலேஷன்ஷிப் அமைப்பினர் இணைந்து நடத்திய சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் கூட்டமைப்பின் குளோபல் தலைவர். டாக்டர். ஈஸ்டர் ராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமில் ஏராளமான திருநங்கைகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.





அவர்களுக்குப் போக்குவரத்து காவலர்கள் சாலை பாதுகாப்பு விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதோடு, இலவசமாகத் தலைக்கவசங்களையும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகதாம்பரம் போக்குவரத்து துணை ஆணையர் பிரபாகர், தாம்பரம் மாநகர போக்குவரத்து காவல் கூடுதல் துணை ஆணையர் விநாயகம் மற்றும் தாம்பரம் மாநகர போக்குவரத்து துறை துணை கமிஷனர். கனகராஜ் அவர்கள் துவக்கி வைத்தார்கள் இந்நிகழ்ச்சியில் மாநில போலீஸ் பப்ளிக் ரிலேஷன்ஷிப் ஒருங்கிணைப்பாளர். டாக்டர். அப்துல் அஜீஸ் மாநில இளைஞர் அணியின் தலைவர் மேடவாக்கம் டாக்டர் மதன் மற்றும் தாம்பரம் ஆய்வாளர் சுரேஷ் துணை ஆய்வாளர் கருணாநிதி மகளிர் அணி தலைவர் டாக்டர் தேவி காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் இக்பால் அகமது, மத்திய சென்னை மாவட்ட தலைவர் முகமது ரஃபி தென் சென்னை மாவட்ட தலைவர் வினோத் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் செய்யது அலி தாம்பரம் தலைவர் மோகன் அகில இந்திய தலைவர் டாக்டர் குமார் பொருளாளர் லோகநாதன் இந்து சித்தாந்த சபா நிறுவனர். டாக்டர் சுரேஷ்குமார் மாவட்ட அமைப்பாளர் முனியப்பன், மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜேஷ் மற்றும் சகோதர அமைப்பை சார்ந்த கலைமாமணி திருநங்கை சுதா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு விதிகள் குறித்து சிறப்புரையாற்றினர்.

சாலை விதிகளை கடைபிடிப்பது குறித்து மேடையில் பேசிய துணை ஆணையர் பிரபாகர் சாலை விபத்துகளைக் குறைக்க அரசு பல்வேறு சிக்னல்கள் மற்றும் சாலைக் குறியீடுகளை அமைத்து வருகிறது. இதற்காக 2.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுப் பணிகள் நடைபெறுகின்றன. இருப்பினும், பொது மக்களின் ஒத்துழைப்பும் விழிப்புணர்வும் இல்லாமல் விபத்து களை முழுமையாகத் தடுக்க முடியாது.

தாம்பரம் மாநகரக் காவல் எல்லைக்குள் கடந்த 2025 ஆம் ஆண்டில் மட்டும் 478 பேர் சாலை விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். நடப்பு 2026 ஆம் ஆண்டில், இதுவரை 278 பேர் விபத்துகளில் உயிரிழந்திருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. குறிப்பாக, 10 முதல் 18 வயதுடைய இளம் வயதினர் விபத்துகளில் சிக்கித் தங்களது உயிரை இழப்பது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகும்.

வாகன ஓட்டிகள் அனைவரும் அதிவேகத்தைத் தவிர்த்து, உரிய வேகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சாலையில் நடந்து செல்பவர்கள், எதிரே வரும் வாகனங்களைத் தெளிவாகக் கவனிக்கும் பொருட்டு, எப்போதும் தங்களது வலதுபுறமாகவே நடக்க வேண்டும். இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பின்னால் அமர்ந்து செல்பவர்கள் அனைவரும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும்.

பொதுமக்களாகிய நாம் அனைவரும் போக்குவரத்து விதிகளை முறையாக மதித்து நடந்தால் மட்டுமே, விபத்தில்லாச் சமூகத்தை உருவாக்க முடியும். இந்த விழிப்புணர்வு முகாமில் சமூக ஆர்வலர்கள், திருநங்கைகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டனர்.



தேனி மாவட்டம் "கீர்த்தி சக்ரா" விருது பெற்ற காமயகவுண்டன்பட்டியைச் சேர்ந்த

# இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரம் இல்லத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் நேரில் சென்று பாராட்டினார்

கம்பம், ஜூன்.19-

தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டியைச் சேர்ந்த இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ.மீனாட்சி சுந்தரம் அவர்கள் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் வெளிப்படுத்திய அசாத்திய வீர தீரச் செயலைப் பாராட்டி இந்திய அரசின் "கீர்த்தி சக்ரா" விருது பெற்றதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இராணுவ வீரரின் இல்லத்திற்கு நேரில் சென்று, பொன்னாடை போர்த்தி பூங்கொத்து வழங்கி பாராட்டினார்.

இந்திய இராணுவத்தின் பீரங்கிப் படைப்பிரிவில் பணியாற்றிவரும்

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த லான்ஸ் நாயக் .அ.மீனாட்சி சுந்தரம்டிசம்பர் 19, 2024 அன்று ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திலுள்ள குல்காம் பகுதியில் நடைபெற்ற பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையின் போது, பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் முகம் மற்றும் தோள்பட்டையில் பலத்த காயம் அடைந்த நிலையிலும், தனது கடமையிலிருந்து தவறாமல் தொடர்ந்து போராடி, பயங்கரவாதிகளை வீழ்த்தினார். அவரது அசாத்திய வீர தீரச் செயலைப் பாராட்டி இந்தியாவின் இரண்டாவது உயரிய அமைதிக்கால வீரவிருதான கீர்த்தி சக்ரா விருதினை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் கடந்த 08.06.2026 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கிச் சிறப்பித்தார்.

அதனைத்தொடர்ந்து, தேசத்தின் பாதுகாப்பிற்காகத் தனது இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட இந்திய இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ.மீனாட்சி சுந்தரம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் 48 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை 15.06.2026 அன்று வழங்கி தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

தேனி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் கீர்த்தி சக்ரா விருது பெற்ற காமயகவுண்டன்பட்டியைச் சேர்ந்த இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரம் அவர்களின் இல்லத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பொன்னாடை போர்த்தி பூங்கொத்து வழங்கி பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வட்டாட்சியர் (உத்தமபாளையம்). பாலசண்முகம் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# தேனி மாவட்டம்தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகக் கிட்டங்கியில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

உத்தமபாளையம், ஜூன்.19-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள நியாயவிலைக்கடை, முதியோர் இல்லம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகக் கிட்டங்கி, ஆதார் சேர்க்கைமையம் மற்றும் கிளைச்சிறைச்சாலை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



உத்தமபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நியாயவிலைக்கடையில் நடப்பு மாதம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விவரம், பொருட்களின் இருப்பு மற்றும் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, எடை அளவிடும் கருவிகளின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகக் கிட்டங்கியில் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் தரம் மற்றும் இருப்பு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், உத்தமபாளையம் பகுதியில் உள்ள தாமஸ் காலனியில் செயல்பட்டுவரும் அரசு இலவச முதியோர் இல்லத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அடிப்படை வசதிகள், உணவின் தரம் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளைப் பார்வையிட்டார்.உத்தமபாளையம் ஆதார் சேர்க்கை மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, அதனைத்தொடர்ந்து, கிளை சிறைச்சாலையில் ஆய்வு மேற்கொண்டு, வருகைப்பதிவேடு, உள் மற்றும் வெளி செல்லும் பதிவேடு உள்ளிட்ட பிற பதிவேடுகள் மற்றும் சிறைச்சாலையில் உள்ள நூலகத்தினை பார்வையிட்டு, விசாரணைக் கைதிகளிடம் அடிப்படைவசதிகள் குறித்து கேட்டறிந்தார். இவ்வாய்வுகளில் வட்டாட்சியர் (உத்தமபாளையம்) .பாலசண்முகம்,

வட்ட வழங்கல் அலுவலர்.மோகன் முனியாண்டி, கண்காணிப்பாளர் (கிளைச்சிறைச்சாலை). கணபதி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 குறித்து, களப்பயிற்சியாளர்களுக்கான மூன்றுநாள் பயிற்சி வகுப்பினை மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் தொடங்கி வைத்தார். உடன், சென்னை மக்கள் தொகை கணக்கெடுப்பு உதவி இயக்குநர்கள் எஸ்.சஜிலால், சஜிதா அஸீஸ், மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குநர் குப்புசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




நீலகிரி மாவட்ட சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில்

# கோத்தகிரி நகராட்சி தூய்மை பணியாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு கூட்டம்

கோத்தகிரி, ஜூன்.19-

நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆணைக்கிணங்க, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் சுந்தரேசன் தலைமையில் கோத்தகிரி நகராட்சி ஆணையர் ஜெயகுருநாதன் மற்றும் நகர் மன்ற தலைவி ஜெயக்குமாரி அவர்கள் முன்னிலையில் 18.06.2026 நேற்று குன்னூர் உட்கோட்டம், கோத்தகிரி காவல் நிலைய எல்லைக்ககுட்பட்ட கோத்தகிரி நகராட்சி தூய்மை பணியாளகள் மத்தியில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.இக் கூட்டத்தில் SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம், POCSO சட்டம், தீண்டாமை ஒழிப்பு குறித்து எடுத்து கூறப்பட்டது. மேலும் SC/ST மக்களுக்கான அரசின் நல திட்டங்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கான அரசின் கல்வி சலுகைகள் பற்றிய நோட்டீஸ் விநியோகிக்கப்பட்டது .



■ திருப்பத்தூர் மாவட்டத்தில் சிங்கப்பெண் அதிரடிப்படை பெண்கள் மற்றும் மாணவிகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்தல், பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அவசர காலங்களில் உடனடி உதவி வழங்குதல் மற்றும் பேருந்து நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட இடங்களில் ரோந்து பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை இப்படை மேற்கொள்ளும்.

# பழனி ஆர்.டி.ஓ அலுவலகத்தில் 3 மணி நேரம் முகாமிட்டு லஞ்ச ஒழிப்பு போலீசார் தீவிர விசாரணை

திண்டுக்கல், ஜூன்.19-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் திடீர் சோதனை நடத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில்.



புதிய ஓட்டுநர் உரிமம் பெறுதல், உரிமத்தை புதுப்பித்தல் மற்றும் வாகனங்களுக்கான எஃப்சி சான்றிதழ் புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு பெருமளவில் லஞ்சம் வாங்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் அடிப்படையில், லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி நாகராஜ். தலைமையிலான போலீசார் பழனி ஆர்.டி.ஓ அலுவலகத்திற்குள் அதிரடியாக நுழைந்து தீவிர சோதனையில் ஈடுபட்டனர். சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக இந்தச் சோதனையின் போது, அலுவலகத்தில் இருந்த முக்கிய ஆவணங்கள் சிலவற்றை லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் தீவிரமாக சரிபார்த்தனர். மேல்விசாரணைக்காக ஒருசில முக்கிய கோப்புகளையும் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். மேலும்தற்போதைய முதற்கட்ட சோதனையில், கணக்கில் வராத லஞ்சப் பணம் எதுவும் பறிமுதல் செய்யப்படவில்லை. என அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.இருப்பினும், அரசு அலுவலகத்தில் 3 மணி நேரமாக லஞ்ச ஒழிப்பு போலீசார் முகாமிட்டு நடத்திய இந்த அதிரடி சோதனை, பழனி வட்டாரத்தில் உள்ள பிற அரசு துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களிடையே மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கிருஷ்ணகிரி அணையில் இருந்து 1000 கனஅடி நீர் திறப்பு

கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

கிருஷ்ணகிரி, ஜூன் 19-

கெலவரப்பள்ளி அணையில் இருந்து வரும் நீரின் அளவை பொறுத்து, கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து ஏற்றத்தாழ்வுடன் காணப்படுகிறது. நேற்று காலை அணைக்கு விநாடிக்கு 865 கனஅடி



நீர் வந்த நிலையில், அணையின் நீர்மட்டம் 50.10 அடியாக உள்ளது. இதனால் அணையில் இருந்து விநாடிக்கு 1000 கனஅடி நீர் ஆறு மற்றும் பாசன கால்வாய்களில் திறக்கப்பட்டு வருகிறது. தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



■ திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் 17.06.2026 அன்று வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 48 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்கள்.

# பாலியல் வன்கொடுமைகளை கண்டித்து சென்னையில் பாஜக ஆர்ப்பாட்டம்: தவெக அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது

சென்னை, ஜூன்.19-

பாலியல் வன்கொடுமைகளை கண்டித்து சென்னையில் பாஜக சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தின் போது தவெக அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது. தமிழகத்தில் அடுத்தடுத்து நிகழும் பாலியல் வன்கொடுமை சம்பவங்களை தடுக்க தவறிய தவெக அரசை கண்டித்து பாஜக சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் இன்று காலை ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் மேலிட பொறுப்பாளர் அரவிந்த் மேனன், முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், துணை தலைவர்கள் சக்கரவர்த்தி, வி.பி.துரைசாமி, மாநில செயலாளர் வினோஜ் பி.செல்வம்,கராத்தே தியாகராஜன், டால்பின் [illegible]தர், சதீஷ்குமார், பால்கனகராஜ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், பிஞ்சுகளின் அலறல் சத்தம் உங்கள் காதுகளுக்கு கேட்கவில்லையா?. இன்னும் எத்தனை நாள்... இந்த மவுனம் முதல்வரே?. இன்ஸ்ட்டா முதல்வரே ரியல் உலகை பாருங்கள். அறுந்து போய்ச்சு. அறுந்து போய்ச்சு. இன்ஸ்ட்டா ரீல் அருந்து போய்ச்சு. மக்கள் மனம் நொந்து போய்ச்சு என்று கண்டன முழக்கங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் நயினார் நாகேந்திரன் பேசுகையில், ''அரசியல் காரணங்களுக்கான இந்த ஆர்ப்பாட்டம் நடக்கவில்லை. பெண்களின் வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு இருக்கிறோம்'' என்றார்

# திருப்பத்தூர் மாவட்டத்தில் நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் இருந்து விவசாய பயன்பாடு, மண்பாண்ட தொழில் மற்றும் சொந்த வீட்டு உபயோக த்திற்கு இலவசமாக வண்டல் மண்எடுத்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

திருப்பத்தூர், ஜூன்.19-

திருப்பத்தூர் மாவட்டத்தில் நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் இருந்து விவசாய பயன்பாடு, மண்பாண்ட தொழில் மற்றும் சொந்த வீட்டு உபயோகத்திற்கு இலவசமாக வண்டல் மண்எடுத்து பயன்படுத்திக்கொள்ள tnesevai.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்.இ.ஆ.ப., தகவல்.திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஏரிகள் குளங்கள் நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின்




கட்டுப்பாட்டில் உள்ளது. ஏரிகளில் இருந்து விவசாய பயன்பாடு, மண்பாண்ட தொழில் மற்றும் சொந்த வீட்டு உபயோகத்திற்கு இலவசமாக வண்டல் மண்எடுத்து பயன்படுத்திக்கொள்ள thesevai.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண், சிட்டா, கைபேசி எண் கொண்டு சென்று மக்கள் கணினி மையத்தில் விண்ணப்பிக்கலாம். இலவசமாக வண்டல் மண் எடுக்க மனுதாரரின் வசிப்பிடம் அல்லது வேளாண் நிலம் மற்றும் மண் எடுக்கப்பட வேண்டிய நீர்த் தேக்கப்பகுதி. ஒரே வட்டத்தின் எல்லை வரம்பிற்குள் அமைந்திருக்க வேண்டும். நில ஆவணங்கள் வருவாய் துறையால் இணையத்தில் சரிபார்க்கப்பட்டு மண் எடுக்க அனுமதி வழங்கப்படும். இலவசமாக வழங்கப்படும் மண்ணின் அளவு விவசாய பயன்பாடு, மண்பாண்ட தொழில். சொந்த வீடு உபயோகத்திற்கு தேவையான அளவு பரிந்துரைக்கப்பட்ட அளவில் இலவசமாக பெற்றுக்கொள்ள தாசில்தார் முன் அனுமதி பெற வேண்டும். மேலும் வரையறுக்கப்பட்ட பகுதியில் இருந்து மட்டுமே மண் எடுக்க அனுமதி வழங்கப்படும். அனுமதி வழங்கப்பட்ட நீர் நிலைகளிலிருந்து தண்ணீர் இல்லாத இடங்களில் சொந்த செலவில் டிராக்டர் கொண்டு மண் எடுக்க வேண்டும்.மண் எடுத்த குழிகள் 1 மீட்டர் ஆழத்திற்குள் இருக்க வேண்டும் கரைகளை சேதப்படுத்தவோ பாதையாக பயன்படுத்தவோ கூடாது. அகற்றப்பட்ட மண்ணை. கல் கட்டுமானப் பணிகள் படுகை. பாலங்கள் ஆகியவற்றில் குவிக்க கூடாது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களை சீரமைக்க மண் எடுக்க அனுமதி இல்லை. பாசன மடையின் அடிமட்டத்திற்கு கீழ் மண் எடுக்க அனுமதி இல்லை நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் அனுமதி ரத்து செய்யப்படும். ஏரிகளின் அணுகு சாலை மற்றும் கட்டமைப்புகளுக்கு சேதம் ஏற்படின், மனுதாரரிடம் இழப்பீடு வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்க உரிமம் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் என திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்.இ.ஆ.ப. தெரிவித்துள்ளார்.

## நிலத்தை அபகரிக்க முயற்சி : மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மனு



சிவகங்கை, ஜூன்.19-

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டை வள்ளலார் தெருவைச் சேர்ந்த P.P.V. அண்ணாமலை மற்றும் இவரின் சகோதரர்கள் பஞ்சாட்சரம், சுப்பையா வேலாயுதம் ஆகியோர் கூட்டாக சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனுவை அளித்துள்ளனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது : சிவகங்கை நகர் சத்தியமூர்த்தி தெரு கிருஷ்ணம் பிள்ளை மகன் KR. ராஜா என்பவர் எங்களுடன் சிநேகமாக இருப்பது போல பழகி பின்னர் சிலரை கூட்டுச் சேர்த்து போலி ஆவணம் ஒன்றை தயார் செய்து.... அதைப் பயன்படுத்தி பவர் பத்திரமும் பதிவு செய்துள்ளார். இந்த போலியான ஆவணத்தை வைத்து சிவகங்கை மாவட்டம் பையூர் பிள்ளைவயல் கிராமம் புல எண்43/1 தற்போது சிவகங்கை டவுன் நகரப் புல எண் 35 ஆக உள்ள எங்களுக்கு சொந்தமான 1 ஏக்கர் 72 சென்ட் நிலத்தை எங்களுக்கு சம்பந்தமில்லாத KR. ராஜா என்பவர் அபகரிக்க முயற்சி செய்து வருகிறார். எனவே சமூகம் அவர்கள் குற்ற நடவடிக்கை தொடராமல் இருக்க போலியான பவர் பத்திரப் பதிவை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வேளாண்மைத்துறை காளையார்கோவில் வட்டாரத்தில் விளைநிலம் காப்போம் விழிப்புணர்வு முகாம்





சிவகங்கை, ஜூன் .19-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டம் செம்பனூர் வருவாய் கிராமம் சூரவந்தி கிராமத்தில் விளைநிலம் காப்போம் முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நி) திரு.பொ. செல்வம் அவர்கள் மேலாண்மை, தலைமை வகித்து ஒருங்கிணைந்த இயற்கை விவசாயம்;, மண்வள ஊட்டசத்து மேலாண்மை, குறைந்த செலவில் காலநிலைகேற்ற விவசாய தொழில்நுட்பங்கள், அதிக வருமானம் பெறுவதற்க்கான தொழில்நுட்பங்கள் மற்றும் அனைத்து பயிர்களுக்கும் உற்பத்தி திறன் மேம்பாட்டு காரணிகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்து கூறினார். காளையார்கோவில் வட்டார துணை வேளாண்மை அலுவலர் திரு.செந்தில் அவர்கள் இப்பயிற்சியில் மண் ஆய்வுக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், மண் ஆய்வு செய்வதன் முக்கியத்துவங்கள் மண் மாதிரி எடுக்க கூடாத இடங்கள் மற்றும் மண் ஆய்வு செய்வதற்கு அனுப்ப வேண்டிய விபரங்கள்;; குறித்து எடுத்து கூறினார். மண் வள அட்டை பயன்படுத்தி பயிர்களுக்கு உரமிடுமாறு அறிவுரை கூறினார். காளையார்கோவில் வட்டார வட்டார தொழில்நுட்ப மேலாளர் திருமதி.ஜோதி அவர்கள் விவசாயிகள் அனைவரும் தங்கள் நிலங்களில் கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் உயிரி உரங்களான திரவ அசோஸ்பைரில்லம் , திரவ ரைசோபியம்(பயறு) திரவ பாஸ்போபாக்டிரியா , உபயோகிக்கும் முறைகள் ( விதை நேர்த்தி, நாற்று நனைத்தல் , நேரடி வயலில் இடுதல் , நீர்வழி உரமிடதல்) பற்றியும் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் எடுத்து கூறினார். மேலும், இலை வண்ண அட்டை பயன்படுத்தி தழைசத்து உரமிடுதல் பற்றி செயல்விளக்கம் மூலம் எடுத்து கூறினார். காளையார்கோவில் வட்டார உதவி வேளாண்மை அலுவலர் செல்வி.யோகலெட்சுமி அவர்கள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள தக்கை பூண்டு (50 சதவீதம் மானியம்), நுண்ணூட்ட உரங்கள் எக்டேருக்கு 12 .5 கிலோ மற்றும் அனைத்து பயிர்களுக்கு திரவ உயிர் உரங்கள் (50 சதவிதம் மானியத்தில்) போன்ற இடுபொருட்களின் இருப்பு விபரங்கள் பற்றிக் கூறினார். மேலும், விவசாயிகள் தங்கள் நிலங்களில் குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்களான சொட்டு நீர்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் திட்டம் குறித்து எடுத்து கூறினார். மேலும், மண்மாதிரி சேகரிப்பதற்கான செயல் விளக்கத் திடலில் வேளாண்மை துணை இயக்குநர் முன்னிலையில் மண் மாதிரிகள் சேகரிப்பட்டது. மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டம் ( அட்மா) 202526 ம் ஆண்டிற்கான நிதியில் வேளாண்மைத்துறைக்கு வழங்கப்பட்ட பூக்கள்ஃ காய்கறிகள் அறுவடை பாதுகாப்பு கருவிகள் அமைக்கபட்ட செயல்விளக்க திடலை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். இந்த முகாம் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் திருமதி. காளிஸ்வரி ஏற்பாடு செய்தார்.

## தமிழகத்தில் 14 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: வானிலை மையம் தகவல்



சென்னை, ஜூன்.19-

தமிழகத்தில் 14 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் இன்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் காற்றுடன் கூடிய கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல், தமிழ்நாட்டின் 27 மாவட்டங்களில் நாளை காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் கணித்துள்ளது. நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல் ஆகிய 27 மாவட்டங்களில் மற்றும் புதுவை, காரைக்காலில் நாளை காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளது. தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும். சென்னையில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 3738கு செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2829கு செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கத்தில் 15 வள பயிற்றுநர் பணியிடங்கள் ஜூன்29க்குள் விண்ணப்பிக்க அழைப்பு



கிருஷ்ணகிரி, ஜூன்.19-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (மகளிர் திட்டம்) சார்பில் ஊராட்சி அமைப்பு நிர்வாகங்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வள பயிற்றுநர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை வரும் ஜூன் 29ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.இதன்படி மாவட்ட வள பயிற்றுநர் (SRP) ஒரு பணியிடம், மாவட்ட வள பயிற்றுநர் (DRP) ஒரு பணியிடம் மற்றும் வட்டார வள பயிற்றுநர் (BRP) 10 பணியிடங்கள் என மொத்தம் 15 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. தேர்வு செய்யப்படுபவர்கள் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பல்வேறு திட்டங்களை கிராம மட்டத்தில் செயல்படுத்துவதற்கும், சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டுவதற்கும் பணியமர்த்தப்பட உள்ளனர்.மாவட்ட வள பயிற்றுநர்களுக்கு மாதம் ரூ.25,000 தொகுப்பூதியமும், மாவட்ட வள பயிற்றுநர் (ஞிஸிறி) பணிக்கு ரூ.18,000 தொகுப்பூதியமும், வட்டார வள பயிற்றுநர்களுக்கு ரூ.10,500 தொகுப்பூதியமும் வழங்கப்படும். மேலும் பயிற்சி மற்றும் பணிக்காலங்களில் தினசரி படி மற்றும் பயணப்படி உள்ளிட்ட சலுகைகளும் வழங்கப்பட உள்ளன.மாவட்ட வள பயிற்றுநர் பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் பெண்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களாக இருக்க வேண்டும். வயது 30 முதல் 45 ஆண்டுகளுக்குள் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். மாவட்ட வள பயிற்றுநர் (DRP) பணிக்கு விண்ணப்பிப்பவர்களும் பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். வயது வரம்பு 30 முதல் 45 ஆண்டுகள் ஆகும்.வட்டார வள பயிற்றுநர் பணிக்கு பெண்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட உள்ளது. வயது 25 முதல் 45 ஆண்டுகளுக்குள் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.மேலும் விண்ணப்பதாரர்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதவும் பேசவும் தெரிந்திருக்க வேண்டும். தகவல் பரிமாற்றம், ஒருங்கிணைப்பு மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து செயல்படும் திறன் பெற்றிருக்க வேண்டும். கணினியில் Word, Excel உள்ளிட்ட மென்பொருட்களை பயன்படுத்தும் திறன் கட்டாயமாகும்.தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பங்களை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்), கிருஷ்ணகிரி முகவரிக்கு நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பலாம். விண்ணப்பங்கள் நேர்காணல் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் என்றும், தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு 24 மாத கால ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தல் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த கூடுதல் விவரங்களை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்), கிருஷ்ணகிரி அலுவலகம் அல்லது இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டிற்கான உரிய நிதிப் பகிர்வினைக் கோர சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றப்படும்

### சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் தகவல்

சென்னை, ஜூன்.19-

தமிழ்நாட்டிற்கான உரிய நிதிப் பகிர்வினைக் கோர சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றப்படும். உச்ச நீதிமன்றம் வரை சென்று நிதிப் பகிர்வினை சட்டரீதியாக பெறுற சட்ட வல்லுநர்கள் சிறப்புக்குழு அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் அர்லேகர் உரையாற்றினார். அதில் கூறியிருப்பதாவது: அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். வழியில் ஜனநாயகத்தின் மேன்மையை மேம்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு நடைமுறைப்படுத்தும். ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டு மக்கள் செலுத்தும் வரியில் இருந்து தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய உரிய நிதிப் பகிர்வினைக் கோருவதற்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றப்படும்.

அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றுவதோடு மட்டும் நின்றுவிடாமல், உச்ச நீதிமன்றம் வரை சென்று நிதிப் பகிர்வினை சட்டரீதியாகப் பெறுவதற்காக சட்ட வல்லுநர்கள் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்படும். தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய ஒவ்வொரு ரூபாய் வருவாயும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டிற்கான நிதிப் பகிர்வில் ஒன்றிய அரசின் பாரபட்சமான அணுகுமுறை அறிக்கையாக வெளியிடப்படும். மேலும், தமிழ்நாட்டிற்குரிய நியாயமான நிதிப் பகிர்வை ஒன்றிய அரசிடமிருந்து பெறுவது உறுதி செய்யப்படும். தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாப்பதற்கும், மாநில உரிமைகளுக்காகப் போராடுவதற்கும், மாநிலங்களுக்குத் தேவையான நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், புதிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, பெரும் முனைப்புடன் இந்த அரசு செயல்படும்.

பொது அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டத்தின் ஆட்சியினை நிலைநிறுத்துவது மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி, மகளிர் மற்றும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவது இந்த அரசின் முதன்மையான லட்சியமாகும். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது இந்த அரசு மிகக் கடுமையான, கண்டிப்பான, விரைவான நடவடிக்கைகள் எடுத்து, உரிய சட்டப் பிரிவுகளின் கீழ் அதிகபட்ச தண்டனை பெற்றுத் தரும்.

மாநிலத்தில் உள்ள கனிமவளங்களை திறம்படவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் நீடித்த காலத்திற்குப் பயன்படுத்தப்படுவதையும் இந்த அரசு உறுதி செய்யும். அரசின் கருவூலத்திற்கு வரவேண்டிய வருவாய் வேறு வழிகளில் திசைமாறிச் செல்வதைத் தடுத்து, அது முறையாக வந்து சேருவதை உறுதி செய்வதற்காக, முறையான ஒழுங்குமுறை மற்றும் அமலாக்கத்தின் மூலம் திட்டமிட்ட சட்டவிரோத கனிமத் தொழிலும், வரி ஏய்ப்பும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்படுகின்றன. இந்த முயற்சிகளின் வாயிலாக, கனிமங்கள் மூலமாக கிடைக்கும் வருவாயை இரட்டிப்பாக்க அரசு தீவிரமாக முயன்று வருகிறது. இவ்வாறு ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது

## தமிழகம் முழுவதும் 44 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை!!




சென்னை, ஜூன்.19-

தமிழகம் முழுவதும் 45 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் ஒரே நேரத்தில் அதிரடி சோதனையில் ஈடுபட்டுள்ளனர். போலீஸ் சோதனையை அறிந்த புரோக்கர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். லஞ்சம் அதிகமாக புழங்கக்கூடிய துறைகளில் போக்குவரத்து துறைமிகவும் முக்கியமானது. டிரைவிங் லைசென்ஸ் எடுக்கவும், வாகன தகுதிச்சான்று பெறவும், தினமும் பல்லாயிரக்கணக்கான பேர் இந்த அலுவலகங்களை தேடி வருகின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலைக்கும் ஒரு ரேட் என லஞ்சம் நிர்ணயிக்கப்பட்டு புரோக்கர்களால் வசூலிக்கப்படுகிறது. இதனையடுத்து மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் 45 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் நடத்தப்படும் இந்த சோதனைகளில் ஏராளமான அலுவலர்கள், ஊழியர்கள், கணக்கில் வராத பணத்துடன் பிடிபட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கோவை, காந்திபுரம் ஒன்றிய ஆர்டிஓ அலுவலகம், திருப்பூர் தெற்கு,தென்காசி, நாகர்கோவில், திருநெல்வேலி, புதுக்கோட்டை, கள்ளக்குறிச்சி, கரூர், கும்பகோணம், திருச்சி, செஞ்சி, சேலம் கந்தம்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், காரைக்குடி, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி உள்ளிட்ட வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர். நீலகிரி மாவட்டம், கூடலூர் மாக்கமூலா பகுதியில் உள்ள போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தில், டி.எஸ்.பி., ஜெயக்குமார் தலைமையில் போலீசார் சோதனை மேற்கொண்டனர். கணக்கில் வராத 80 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161